நாவிதன்வெளி பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 03 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து நாவிதன்வெளி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு

மீளாயவாண்டில் பதிவளிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டுக்கான மீதியாகக் காணப்பட்ட இறைச்சிக் கடை நிலுவை ரூபா 1,235,677 தொகையினை திரண்ட நிதியில் கழிக்காமல் வருமானச் செலவுக்கணக்கில் மீளாய்வாண்டுக்கான வாடகை வருமானத்தில் குறைத்துக் காட்டியமையினால் ஆண்டுக்கான வருமானம் அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய கணக்கு

2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவை ரூபா 42,669 தொகை தொடர்பில் அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | - | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 62,823 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 17 வைப்புக்கள் தொடர்பில் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்கு மிகையான வருமானம் ரூபா 3,179,304 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்கு மிகையான வருமானம் ரூபா 4,623,162 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,443,858 பின்னடைவைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| வீதவரிகளும் வரிகளும் | -- | -- | -- | -- | 15 | - | -- | -- |
| வாடகை | 2,856 | 2,870 | 2,593 | 1,510 | 2,210 | 2,136 | 1,788 | 2,470 |
| உரிமைக் கட்டணம் | 485 | 426 | 426 | -- | 310 | 424 | 424 | -- |
| ஏனைய வருமானம் | 6,592 | 5,940 | 4,269 | 1,671 | 5,952 | 5,191 | 5,013 | -- |

#### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 11,182,662 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 7,288,370 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 65% ஆக காணப்பட்டிருந்தது.

#### 2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 324 வர்த்தக நிலையங்கள் மற்றும் 6,049 வீடுகள் மீது வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு

நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 3,200,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

2.2.4 இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை

2007 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியில் அறவிடப்படவேண்டிய ரூபா 1,234,304 தொகையான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவையினை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டுச் செயற்றிறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திற்கமைய பொதுநூலகங்களுக்கான புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 250,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் ரூபா 91,886 பெறுமதியான புத்தகங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் வாசகர்களுக்கு தேவையான புத்தகங்களை இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூலக செயற்பாடுகளை அதிகரித்து வாசகர்களின் அறிவை பெருகச் செய்வதற்காக நூலக அபிவிருத்திக் குழு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டிருந்தும், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை 05 கூட்டங்களை மாத்திரம் நடத்தியுள்ளதுடன், நூலகத்தின் வளர்ச்சி மற்றும் வாசகர்களின் நூலக பயன்பாடும் மந்தநிலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

3.2 பெறுகைகள் நடைமுறைகள்

3.2.1 சிறுவர் பூங்கா விளையாட்டுப் பொருட்கள் கொள்வனவு

மாகாண சபை உறுப்பினரினால் குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையின் கீழ் 2017 ஆம் ஆண்டில் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட மத்திய முகாம் பகுதியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்காக ரூபா 400,000 பெறுமதியில் மதிப்பிடப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை விளையாட்டு உபகரண விற்பனை நிலையங்களிடமிருந்து கொள்வனவு செய்யாது ஒப்பந்த அடிப்படையில் கொள்வனவு செய்தமையினால் மதிப்பீட்டில் ஒப்பந்தகாரருக்கு மேலதிகமான ரூபா 96,388 தொகையான 14% இலாபம் மற்றும் 15% பெறுமதி சேர்வரி உள்ளடங்குவதனால் குறித்த ஒதுக்கீட்டின் மூலம் கொள்வனவு செய்யத்தக்கதாக காணப்பட்ட ஒரு விளையாட்டு உபகரணத்தினை இழந்துள்ளது.

(ஆ) சபையினால் ஒப்பந்த அடிப்படையில் ரூபா 353,322 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் சபையினால் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களின் வரைபட மாதிரிக்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இருந்தும், சபையினால் இவ் உபகரணங்கள் வழங்கப்பட்ட வரைபட மாதிரிக்கு அமைவாக உள்ளது என தொழிநுட்ப உத்தியோகத்தரால் சிபாரிசு செய்யப்பட்டு கொடுப்பனவுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

3.2.2 விரலடையாள பதிவு இயந்திரம் கொள்வனவு

பெறுகை வழிகாட்டியின் பிரிவு 3.5 இன்படி போட்டித்தன்மையற்ற விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே நேரடி ஒப்பந்தம் மூலம் கொள்வனவு செய்யமுடியுமான போதிலும் மேற்படி காரணங்களின்றி பெறுகை நடைமுறையினை பின்பற்றாது நேரடி ஒப்பந்தம் மூலம் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 92,862 தொகைக்கு விரலடையாள பதிவு இயந்திரமானது கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், வேறு சபைகளில் கொள்வனவு செய்யப்பட்ட இதே தரத்திலான விரலடையாள பதிவு இயந்திரத்தின் பெறுமதியானது ரூபா 51,500 ஆகக் காணப்பட்டிருந்ததன்படி சபையானது ரூபா 41,362 தொகை மேலதிகமாக செலவிட்டுள்ளது.

3.2.3 பொது நூலகத்திற்கு தளபாடங்கள் கொள்வனவு

2017 ஆம் ஆண்டிற்கான மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 1,000,000 தொகை நாவிதன்வெளி பொது நூலகத்திற்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திடமிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யபட்டமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அவசியத் தேவையின் பொருட்டு நேரடி ஒப்பந்தம் மூலம் பொருட்கள் கொள்வனவு செய்யபட்ட போதிலும் 14 மாதங்கள் கடந்தும் இன்றுவரை குறித்த தேவை பூர்த்தி செய்யப்படடிருக்கவில்லை.

(ஆ) 2017 ஜுன் 27 ஆம் திகதி வழங்குனருக்கு வழங்கப்பட்ட கொள்வனவு கட்டளையின்படி 18 வகையான 130 தளபாடங்கள் 2017 யூலை 27 ஆந்திகதிக்குமுன் வினியோகிக்கப்படவேண்டிய போதிலும், 2017 ஆகஸ்ட் மாதத்தில் 91 பொருட்களும் 2017 ஒக்டோபர் மாதத்தில் 04 பொருட்களும் 2017 நவம்பர் மாதத்தில் 23 பொருட்களும் விநியோக்கிகப்பட்டிருந்தது.

(இ) கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களில் 10 வகையான 68 தளபாடங்களின் விலைகள் தொடர்பாக உரிய பொருள் உற்பத்தி நிறுவனங்களின் விலைப்பட்டியல்களுடன் பரீட்சித்துப் பார்த்த போது பெறுகை நடைமுறையினை பின்பற்றாது நேரடி ஒப்பந்தம் மூலம் பொருட்கள் கொள்வனவு செய்ததினால் சபை ரூபா 68,371 தொகையை இழந்துள்ளது.

3.2.4 வீதிகளிற்கு கொங்கிரீட் இடல் மற்றும் வடிகான் அமைத்தல்

மீளாய்வாண்டில் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வீதிக்கு கொங்கிரீட் இடல் மற்றும் வடிகான் அமைப்பதற்காக சபையின் எல்லைக்குட்பட்ட GMMS பாடசாலை வீதிக்கு ரூபா 2.7 மில்லியன் தொகையும் மோதினார் வீதிக்கு ரூபா 3.3 மில்லியன் தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. இவை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) GMMS பாடசாலை வீதி வேலையில் ரூபா 159,159 தொகைக்கான கொங்கிரீட் தூள் 2018 ஆகஸ்ட் 31 திகதி வரை இடப்படாத போதிலும் இதற்கான கொடுப்பனவு ஒப்பநதக்காறருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2018 ஆகஸ்ட் 31 திகதி வரை மோதினார் வீதி வேலையில் ரூபா 430,590 தொகைக்கான அனுமதிக்கப்பட்ட தரத்திலான மண் இட்டு கல் அமுக்கியால் சமப்படுத்தல் மற்றும் சிறந்த தரமுள்ள கொங்கிரீட் தூள் பரவுதல் போன்ற வேலைகள் செய்யப்படாத போதிலும் இதற்கான கொடுப்பனவு ஒப்பநதக்காறருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |
| (ஈ) பெறுகை நடைமுறை | பொருட்களின் விலையானது நியாயமானகாகவும் ஒப்பீட்டு அனுகூலம் உடையதாகவும் இருத்தல். |